**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி**

முன்னிலை : திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி

2026 ம் வருடம் ஜீன் மாதம் 18 ம் நாள் வியாழக்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண்.198/2026**

*******

அரிகிருஷ்ணன் – 29/26
த/பெ.முத்து,
மேலத்தெரு,
திருச்சுழி தாலுகா,
விருதுநகர் மாவட்டம். :: மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக
சார்பு ஆய்வாளர்,
திருச்சுழி காவல் நிலையம்,
குற்ற எண்.212/2026,
பிரிவுகள் 296(b), 126(2), 118(1), 351(3) BNS

:: எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

*********

இம்மனு என் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு.V.செந்தில்குமார்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராஜமாணிக்கம், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து இன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, இருதரப்பு வாதமும் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி தரப்பில் பிணை வேண்டி பிரிவு 480 BNSS Act–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி மீது திருச்சுழி காவல் நிலையம் குற்ற எண்.212/2026, பிரிவுகள் 296(b), 126(2), 118(1), 351(3) BNS–ன் கீழ் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

<u>**வழக்கின் சுருக்கம்**</u>:–

3. வழக்கின் சுருக்கம் யாதெனில், இவ்வழக்கின் புகார்தாரருக்கும், 1ம் எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோம் இருந்து வந்த நிலையில் கடந்த 28.05.2026ம் தேதி இரவு 10.00 மணிக்கு புகார்தாரர் தமிழ்பாடி கிராமத்தில் உள்ள கருப்பசாமி கோவிலில் படுத்திருந்ததாகவும், அங்கு சென்ற எதிரிகள் புகார்தாரரை அசிங்கமாக திட்டியும், 2ம் எதிரி புகார்தாரரை பிடித்துக்கொள்ள 1,3 எதிரிகள் புகார்தாரரை முட்டை தூக்கும் ஊக்கால் தலை மற்றும் இரண்டு கைகளிலும் குத்தி காயப்படுத்தியதாகவும், அருகிலிருந்த சாட்சிகள் சண்டையை விலக்கிவிட எதிரிகள் புகார்தாரரை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தும், பின்னர் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து புகார்தாரர் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் திருச்சுழி காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 126(2), 118(1), 351(3) BNS–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>**மனுவின் சுருக்கம்**</u>:–

4. மேற்படி மனுவில் எதிரி கடந்த 03.06.2026ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மேற்படி எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் அவர் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக மாட்டார். மேலும் தகுந்த ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்த தயாராக உள்ளார். எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுமாறும் கோரியிருந்தார்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரை</u>:-

5. அதற்கு மாறாக அரசு தரப்பில், இவ்வழக்கின் எதிரி சட்டத்திற்கு புறம்பான குற்ற செயல்களை தொடர்ந்து செய்து வருகிறார். இவர் மீது திருச்சுழி காவல் நிலையத்தில் 5 குற்ற வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன. மேற்படி எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் மேற்படி தலைமறைவாகவோ, சாட்சிகளை கலைக்கவோ கூடும் என்பதாலும், மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற இரண்டு எதிரிகள் தலைமறைவாக இருந்து வருவதாலும், வழக்கு விசாரணைக்கு இடையூறு எற்படும் என்பதாலும், எனவே மேற்படி எதிரியை பிணையில் விடுவதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

<u>தீர்முடிவு</u>:-

6. இருதரப்பு வாதங்களும், வழக்கு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

7. இவ்வழக்கின் மனுதாரர்/எதிரி கடந்த 03.06.2026 ம் தேதி முதல் இன்று 18.04.2026 ம் தேதி வரை **16** நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கை பொறுத்தவரை மேற்படி மனுதாரர்/எதிரி புகார்தாரரை அசிங்கமாக பேசி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து தூக்கு ஊசியால் புகார்தாரரை காயப்படுத்தியுள்ளார் என்பதாகும். மனுதாரர் தரப்பில் இந்த சம்பவத்தின் போது மனுதாரருடன் இருந்ததாக கூறப்பட்டுள்ள எதிரிகள் சக்திவேல் மற்றும் அருண்பாண்டியன் ஆகியோருக்கு மாண்புமிகு விருதுநகர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் முன்பிணை வழங்கியுள்ளதாகவும், எனவே மனுதாரருக்கும் பிணை வழங்குமாறு கோரப்பட்டது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில் இந்த **மனுதாரர் மீது கொலை வழக்கு, கொலை முயற்சி வழக்கு மற்றும் Arms Act-ன் கீழான வழக்குகள் என மொத்தம் 5 வழக்குகள் உள்ளதாக**

**தெரிவிக்கப்பட்டுள்ளது.** இவ்வாறு கொடுங்குற்ற வழக்குகள் 5 மனுதாரர் மீது நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் இருந்து வரும் சமயம் அவரை பிணையில் விடும் பட்சத்தில் அவர் இதுபோன்று தொடர்ச்சியாக குற்ற செயலில் ஈடுபட வாய்ப்பு உள்ளதாலும், வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகவோ, சாட்சிகளை கலைக்கவோ கூடும் என்பதாலும், எதிரியை பிணையில் விடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என கருதி இந்நீதிமன்றம் இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

**8. இறுதியாக,**

**இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

*இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு* ***2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 18 ம்*** *நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

**//உண்மை நகல்//**

(ஒம்/-S.வேல்சூர்யா, 18.06.2026)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.